மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, யாருக்கும் இலவசமாகக் கொடுப்பதில்லை. பணத்தின் அடிப்படையில்தான் கொடுக்கப்படுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஸார், இந்தப் பொருள்களை வாங்கிக் கொள்முதல் செய்யும் நேரத்தில், அதில் கழிவு என்ற பெயரால் ஐந்து முதல் பத்து சதவிகிதம் கழித்து விடுகிறார்கள். அதற்கு மேல் நிர்வாக வரி என்று வாங்கப்படுகிறது. அந்த முறையில் இரண்டு வரிகளைப் போல் தெரிகிறது அல்லவா ? ஒன்று இந்த கழிவு செய்வதை விட்டுவிட வேண்டும் ; அல்லது இந்த வரியையாவது விட்டுவிட வேண்டும். இல்லையென்றால் அமைச்சர் அவர்கள் இரண்டுமே இருக்க வேண்டுமென்று கருதுகிறாரா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பொதுவாக இப்போது உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்குகிற விலைக்கும், விநியோகிக்கப்படும் இடத்தில் இருக்கிற விலைக்கும் மத்தியில் இருக்கிற வித்தியாசங்கள் குறைக்கப்படவேண்டும் என்ற உறுப்பினருடைய கருத்தை ஏற்றுக்கொள்ளலாம். திரும்பத் திரும்ப அரசாங்கம் உணவுப் பொருள் மீது வரி போடுகிறது என்று பிரசார நோக்கத்தோடு வலியுறுத்துவதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. கழிவு என்பது ஐந்து சதவீதம் என்று சொன்னார்கள் ; அது $2\frac{1}{2}$ சதவீதம் தான் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இ. எஸ். ஐ. மருந்தகங்கள், திருப்பூர்

*407 வினா.—**திரு. சு. துரைசாமி :** மதிப்பிற்குரிய மருத்துவத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருப்பூர் இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் பதிவு செய்து கொண்டுள்ள தொழிலாளர்கள் எண்ணிக்கை என்ன ?

(இ) திருப்பூர் இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் இந்த தேதியில் வேலையில் உள்ள டாக்டர்களின் எண்ணிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) திருப்பூரில், கேள்வியில் குறிப்பிட்டுள்ளபடி இ.எஸ்.ஐ. மருத்துவமனை இல்லை. ஆனால் அங்கு இரண்டு இ.எஸ்.ஐ. மருந்தகங்கள் (Dispensaries) இயங்கி வருகின்றன. 1—4—1967 வரை அவைகளில் பதிவு செய்யப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

இ.எஸ்.ஐ. மருந்தகம், திருப்பூர் 1	3,583 பேர்.
இ.எஸ்.ஐ. மருந்தகம், திருப்பூர் 2	3,883 பேர்.

(இ) திருப்பூரில் இ.எஸ்.ஐ. மருந்தகங்களில் இந்த தேதியில் வேலையில் உள்ள டாக்டர்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

இ.எஸ்.ஐ. மருந்தகம், திருப்பூர் 1	5
இ.எஸ்.ஐ. மருந்தகம், திருப்பூர் 2	4

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, திருப்பூர் நகரில் இ.எஸ்.ஐ. திட்டம் தொழிலாளர்களுக்கு விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அங்கு போதுமான டாக்டர்கள் இல்லை என்பது அமைச்சருக்குத் தெரியுமா ? அப்படித் தெரிந்திருந்தால் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அங்குள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையை வைத்து ஒன்பது டாக்டர்கள் போடவேண்டுமென்று முடிவுகட்டி இப்போது போடப்பட்டிருக்கிறார்கள்.